**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்**
**ந.க.எண். 4403/அ1/2026, நாள். 07.09.2026**
---

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வி – இளநிலை உதவியாளர் /தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களுக்கு உதவியாளராகப் பதவி உயர்வு/பணிமாறுதல் வழங்குவது –15.03.2026 நிலவரப்படி தகுதிவாய்ந்தோர் விவரம் கோருதல்– தொடர்பாக.

**பார்வை :** தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.053051/அ4/இ3/2026, நாள்.03.09.2026.

-----

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு, வேலூர் மாவட்டம், முதன்மைக் கல்வி அலுவலரின் ஆளுகையின் கீழ் செயல்படும் அனைத்து அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் /தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களுக்கு உதவியாளராகப் பதவி உயர்வுக்கு 15.03.2026 நிலவரப்படியான உத்தேச பெயர் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் பொருள் சார்பாக 15.03.2026 நிலவரப்படி உத்தேச பெயர் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் இருப்பின் அதன் விவரங்களுடன் நேரில் வந்து இப்பெயர் பட்டியலில் ஒப்புதல் வழங்குமாறும் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் இல்லை எனில் **"இன்மை"** அறிக்கையினை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், மேற்காண் பொருள் சார்பாக உத்தேச பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இளநிலை உதவியாளர் /தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 பணியாளர்களை உடன் தகவல் அளித்து 11.09.2026 அன்று காலை 10.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு ஒப்பம் பெறும் பொருட்டு அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு :**
1.பார்வையில் காணும் கடிதம்
2.உத்தேச பெயர் பட்டியல்
3.படிவம்.

/ஒப்பம்/
**முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),**
**வேலூர்.**

பெறுநர் :
1. முதன்மைக் கல்வி அலுவலர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( இடைநிலை / தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள் ), வேலூர் மாவட்டம்.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்.
4. சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு .